**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.51/2024 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வீரமணிகண்டன் | த-பெ | கண்ணன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 38/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் வேலை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025**

---

**17.07.2025**

**முதல் விசாரணை:**

**1) 10.02.2019 அன்று மீனாட்சி பாஜாஜ் ஷோரூமில் பணிக்கு சேர்ந்தேன். முதல் ஒரு மாதம் ஒர்க்ஷாப்பில் பணிபுரிந்தேன் பின்பு முன் அலுவலகத்தில் ( Front Office) மேலாளராக பணிபுரிந்தேன். காரைக்குடியில் உள்ள ஷோரூமிற்கு மட்டும்தான் மேலாளராக இருந்தேன். புகார்தாரரின் மற்ற கிளைகளுக்கு ஆங்காங்கே மேலாளர்கள் இருந்தார்கள். எனக்கு கொடுக்கப்பட்ட பொருப்பானது புதிய பைக்குகளை வாங்குவது, விற்பது, பழைய பைக்குகளை எக்ஸ்சேஞ் செய்வது மட்டுமே. எனக்கும் கணக்கு வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. 17.05.2023 ல் புகார்தாரர் GST செலுத்துவதில் ஏதோ குழப்பம் உள்ளதாக கூறி என்னிடம் சில பேப்பர்களில் கையொப்பம் கேட்டனர் நான் போடவில்லை. எனது நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிலருக்கு வங்கி கணக்கு மூலமாகவும், சிலருக்கு நேரடியாகவும் சம்பளம் கொடுத்து வந்தனர் அதில் ஏதோ சிக்கல் இருந்ததாகவும், அதற்காக என்னிடம் கையொப்பம் கேட்டனர் ஆனால் நான் அது குறித்து எதுவும் எனக்கு தெரியாது என்பதால் நான் கையொப்பம் செய்யவில்லை.**

**2) 18.05.2023 ல் நான் வேலைக்கு விடுப்பு எடுத்தேன். மறுநாள் ரூ.27 லட்சத்து' 57 ஆயிரம் நான் நிறு வனத்தில் கையாடல் செய்துவிட்டதாக என் மீது காரைக்குடி**

வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அன்றைய தினமே வழக்கு ரசீது வழங்கப்பட்டது. 20.05.2023 அன்று காவல் ஆய்வாளர் அழைப்பின்பேரில் நான் காவல் நிலையத்தில் ஆஜரானேன். புகார்தாரரும் அங்கிருந்தார். ஆயவாளர் நான் கையாடல் செய்துவிட்டதாக சொல்லப்படும் பணத்தை கட்டவில்லை என்றால் என்னை மற்றும் என் குடும்பத்தினரை சிறையில் வைத்துவிடுவோம் என்றும் மிரட்டினார் அதற்கு நான் சம்மதிக்கவில்லை. பின்பு புகார்தாரர் தரப்பினரும் என்னிடம் சமாதானம் பேசினார்கள் அதன் பின்பு எனது குடும்பத்தாரை வரச்சொல்லி கட்டாயப்படுத்தி நான் திரும்ப பணத்தை செலுத்திவிடுவதாக கூறி என்னிடம் கையொப்பம் பெற்றனர்.

3) அன்றைய தினம் என்னிடம் காசோலை எதுவும் இல்லாததால் 2 நாட்களுக்கு பின்பு வங்கியில் விண்ணப்பித்து காசோலைகள் பெற்று மொத்தமாக 8 காசோலைகளை காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றனர். மீதம் உள்ள 17 காசோலைகளையும் கையொப்பம் பெறாமல் புத்தகத்துடன் எடுத்துக்கொண்டு சென்று விட்டனர். அடுத்ததாக 2 நாட்களில் சுந்தர்ராஜன் மற்றும் விஸ்வநாதன் எனது வீட்டிற்கு வந்து நான் காவல் எழுதிக்கொடுத்த அதே விபரங்களை ரூ. 50 பத்திரத்தில் என்னிடமும், என் மனைவி மற்றும் என் தாயாரிடம் எழுதி கையொப்பம் பெற்று சென்றனர். அதுபோக 13 கடனுறுதிசீட்டிலும் கையொப்பம் பெற்று சென்றனர். மேலும் எனது மற்றும் என் மனைவி மற்றும் அம்மாவின் ஆதார் அடையாள அட்டையினையும், பெற்றுக்கொண்டனர். என் அம்மா மற்றும் மனைவியின் வங்கி விபரங்களை பரிசோதித்தனர் அதில் தொகை எதுவும் இல்லை என்று தெரிந்து கொண்டனர். பின்பு 3 மாதங்கள் கழித்து மீண்டும் காவல் ஆய்வாளர் அழைத்து பணம் கேட்டார் என்னிடம் இல்லை நான் எதுவும் தரவேண்டியதில்லை சொன்னேன் ஆனால் அவர் பணத்தை ஒரு வாரத்திற்குள் கொடுக்கவில்லை என்றால் சிறையில் வைத்து விடுவதாக மிரட்டினார். பின்பு என்னை அழைக்கவில்லை. பின்பு 2 மாதம் கழித்து சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவில் இருந்து என்னையும் என் மனைவியையும் அழைத்து விசாரித்தனர். அதில் நான் எந்த பணமும் கொடுக்கவேண்டிதில்லை என்று சொன்னேன் ஆனால் அவர்கள் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்ததுபோல் நடந்துகொள்ளவேண்டும் என்றும், 3 மாத காலத்திற்குள் பணத்தை திரும்ப செலுத்தவேண்டும் என்றும், என்னிடம் கட்டாயப்படுத்தி எழுதி வாங்கி கொண்டனர். பின்னர் இந்த காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்து அதில் எனது முகவரியை எனது ஆதார் அட்டையில்

உள்ளதை காட்டி தாக்கல் செய்துள்ளனர். ஆனால் அவர்களுக்கு தற்போது குடியிருக்கும் முகவரி நன்றாக தெரிந்தும் தவறான முகவரியை கொடுத்து தாக்கல் செய்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணைகளை திரும்ப பெறவைத்துள்ளனர். பின்பு ஒரு நாள் நீதிமன்றத்தில் எனது பெயரை அழைக்கும்போது எனது வழக்கறிஞர் அதை தெரிந்து கொண்டு என்னிடம் தெரிவித்தார் அதன்பேரில் நான் இங்கு ஆஜராகினேன்.அப்போதுதான் எனக்கு அவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி தெரியும்.

4) இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பும் தொடர்ச்சியாக காவல் துணை கண்காணிப்பாளர் காரைக்குடி அவர்களிடம் தொடர்ந்து விசாரணைக்கு வரச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தி பணத்தை திரும்ப செலுத்த சொல்லி தொந்தரவு செய்து வருகின்றனர். பின்பு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் என் மீது முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டு நான் கைது செய்யப்பட்டதாக நாழிதள்களில் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

( இந்த முதல் விசாரணையை எதிரி தரப்பு கோரிக்கையை ஏற்று C.C. No.11/2024, C.C. 22/2024, C.C. 152/2023 ஆகிய வழக்குகளுக்கும் எதிரி தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.17 17:44:25 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.சுஃ.பொ)